மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
O.S.No. 145/2021

வாக்குமூலம்: வா.சா.2 – சோனைமுத்து

<u>19.08.2025:</u>

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

நான் கோதைமங்கலத்தில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். 1ஆம் பிரதிவாதி கமலா தேவி மானூர் கிராமத்தில் தான் குடியிருந்து வருகிறார் என்றால் அதைப் பற்றி எனக்குத் தெரியாது. வாதி பழனி டாக்டர் கோபாலன் தெருவில் கதவு எண்.5 வீட்டில் குடியிருந்து வருகிறாரா என்றால் மானூரில் குடியிருந்து வருகிறார். வாதி தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் மேற்கண்ட முகவரியில் தான் வசித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியாது. வாதி எந்த ஊரைச் சேர்ந்தவர் என்றால் கொமரலிங்கம் கிராமத்தைச் சேர்ந்தவர் ஆவார். சத்யாவுக்கும், தெய்வநாயகிக்கும் எப்போது திருமணம் நடந்தது என்றால் சுமார் 35 வருடங்களுக்கு முன் கொமரலிங்கம் கிராமத்தில் நடைபெற்றது. சத்யாவுக்கு பிறந்த மகள்கள் பெயர் தெரியுமா என்றால் தெரியும். அவர்கள் எப்போது எங்கு பிறந்தார்கள், என்ற விபரம் எனக்குத் தெரியாது. கோட்டைமுத்து எனக்கு என்ன உறவு வேண்டும் என்றால் எனக்கு தெரியாது. கோட்டைமுத்து மூலம் தான் சத்யாவை எனக்குத் தெரியும் என்றால் எனக்குத் தெரியாது. கோட்டைமுத்து அவர்கள் சொன்னதன் பேரில் தான் நான் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் இல்லை. கோட்டைமுத்துவும், சத்யாவும் கணவன் மனைவியாகத்தான் வாழ்ந்து வருகிறார்கள் என்றால் இல்லை. தெய்வநாயகம் பழனி சஞ்சய் மருத்துவமனையில் தான் காலமானார் என்றால் இல்லை மானூரில் இறந்தார். தெய்வநாயகம் பழனியில் காலமானார் பின்பு மானூரில் அவர் அடக்கம் செய்யப்பட்டார் என்றால் இல்லை, மானூரில் தான் காலமாகி அடக்கம் செய்யப்பட்டார். தெய்வநாயம் இறந்த பிறகு தான் அவரைப் பார்க்க சென்றேன். அவர் எங்கு இறந்தார் என்ற விபரம் எனக்குத் தெரியாது. தெய்வநாயகம், சத்யாவுக்கு எத்தனை பெண் மக்கள் என்றால் 2 பெண் மக்கள் துளசி, கௌசல்யா ஆவர். சத்யா, தெய்வநாயகத்திற்கு மனைவி என்ற வாரிசுரிமை பெற

முடியாது என்றால் சரியல்ல. தெய்வநாயகத்திற்கு சத்யா மனைவி அல்ல என்றால் இல்லை நான் அவர்கள் திருமணத்திற்கு சென்றுள்ளேன். தெய்வநாயகம் மனைவி கமலா தேவி தான் என்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியாது. நான் சத்யாவுக்கு கோட்டைமுத்துவுக்கும் ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை.

ஒம்/–சு.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.